www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

12 R

தேர்வு எண்:

# காலாண்டுத் தேர்வு - 2024

## தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

குறிப்பு 1. விடைகள் தெளிவானதாகவும் குறிப்பட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

பகுதி - 1

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 14 x 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேர பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. கருத்து1 இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு
கருத்து2 தொடரமைப்பு சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 2 சரி, 1 தவறு
3. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மலைமேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர் நிலைகள்
4. தமிழில் திணைப்பாகுபாடு ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
5. கம்பர் தாம் எழுதிய நூலுக்கு சூட்டிய பெயர்
அ) கம்பராமாயணம் ஆ) இராமாவதாரம் இ) இராமசரிதம் ஈ) கம்பசித்திரம்
6. 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே' - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது
அ) தனிக் குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தை வழிச் சமூக முறை
7. 'வையகமும் வானகமும் ஆற்றலரிது' எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி
இ) தினைத் துணை செய்த நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி
8. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
9. 'காவினெம் கலனே, சுருக்கினெம் கலப்பை' - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி
10. 'காவியதர்சம்' என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல்
அ) தண்டியலங்காரம் ஆ) தொல்காப்பியம் இ) நன்னூல் ஈ) இலக்கண விளக்கம்
11. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| அ) திருவல்லிக்கேணி ஆறு | - | 1) மாவலிபுரச் செலவு | |
| ஆ) பக்கிங்காம் கால்வாய் | - | 2) கல் கோடரி | |
| இ) பல்லாவரம் | - | 3) அருங்காட்சியகம் | |
| ஈ) எழும்பூர் | - | 4) கூவம் | அ) 1 2 3 4 ஆ) 4 2 1 3 இ) 4 1 2 3 ஈ) 2 4 3 1 |

12. படிமம் என்பதன் பொருள் அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
13. நடுவண் அரசு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்த ஆண்டு அ) 1992 ஆ) 2005 இ) 2010 ஈ) 2009
14. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது? அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாளி

பகுதி - II பிரிவு - I

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3 x 2 = 6

15. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக.
16. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
17. வசனம், கவிதை வேறுபாடு தருக
18. பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் - தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 2 = 4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. புக்கில், தன்மனை சிறு குறிப்பு தருக
21. ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியின் வகைகள் யாவை?

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடையளி 7 x 2 = 4

22. பின்வரும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்தெழுதுக. எலியும் பூனையும் போல
23. இலக்கணக்குறிப்பு தருக அ) வெங்கதிர் ஆ) வளைஇ
24. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக
25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக தலை, தளை, தழை (அல்லது) அலை, அளை, அழை
26. வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக
ஆசிரியருக்கு கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றைக் கற்று கொடுக்கும்.
27. பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக
அ) கண்ணிரண்டும் ______ (இல்லாதார்/ இல்லார்) ஆ) வெண்ணிலவு ______ (காய்கிறது/ ஒளிர்கிறது)
28. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக
நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது
29. பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஒட்டாண்ட வெளையாண்ட கொழந்தைய அப்பா எங்க இஸ்துகினு போனாரு

30\. ஏதேனும் ஒன்றுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக அ) செய்த ஆ) கண்டான்

பகுதி - III பிரிவு - I

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 4 = 8

31\. எங்கோலிநீர் ஞாலத்து இருளகற்றும் இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக

32\. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பை தேடினர்?

33\. சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக

34\. இராமலிங்க அடிகளார் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடையளி 2 x 4 = 8

35\. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக

36\. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை?

37\. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

38\. சென்னையின் பண்பாடு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றை குறிப்பிடுக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3 x 4 = 12

39\. அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக (அல்லது)
ஆ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40\. இலக்கிய நயம் பாராட்டுக (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்

\- கவிமணி

41\. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்தெழுதுக. யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது)
தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்

42\. அ) பாடன் திணையைச் சான்றுடன் விளக்குக (அல்லது)
ஆ) கூதிர்ப்பாசறை துறையைச் சான்றுடன் விளக்குக.

43\. தமிழாக்கம் தருக
1) A new language is a new life
2) If you want people to understand you speak there language
3) knowledge of languages is the door way to wisdom
4) the limits of my language are the limits of my world

44\. செவிமாற்று திறனாளர்களுக்கான மாற்று வினா

கீழ்காணும் பத்தியை படித்து வினாக்களுக்கு விடை தருக 'வசனநடை கைவந்த வள்ளலார்' என புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி என்னும் மும்மொழி புலமை பெற்றவர் திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, என்று பல நூல்களைப் பதிப்பித்தார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாடுதுறை ஆதீனம் இவருக்கு நாவலர் பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தை தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார். இலக்கண நூல்கள் பூமி சாஸ்திரம் முதலான பாடநூல்கள் இவரால் ஆக்கப்பட்டன.

**வினாக்கள்**

1) 'வசனநடை கைவந்த வள்ளலார்' என புகழப்படுபவர் யார்?
2) ஆறுமுக நாவலர் எந்தெந்த மொழிகளில் புலமை பெற்றிருந்தார்?
3) திருவாடுதுறை ஆதீனம் ஆறுமுக நாவலருக்கு வழங்கிய பட்டம் யாது?
4) ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் இரண்டினை எழுதுக.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 3 x 6 = 18

45\. அ) தமிழின் சீரிளமை திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் கூறுவனவற்றை தொகுத்தெழுதுக (அல்லது)
ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக

46\. அ) பண்டையகாலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக (அல்லது)
ஆ) 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு' - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

47\. அ) பொறுப்புணர்ச்சி இன்றி இருந்த உரை தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க (அல்லது)

48\. ஆ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்..... கதையை தொடர்ந்து எழுதி முடிக்க

பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக 4 + 2 = 6

49\. அ) 'அறிவும் புகழும்' - எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக
ஆ) 'வரும்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com